## 7. அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, '' பேரவையின் 41 (3) வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் '' என்று கோருகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, * * *

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர், உறுப்பினர் கொடுத்த அறிக்கையை படிக்கவில்லை, எதையோ பேசுகிறார், அப்படி பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? வேறு ஏதாவது உறுப்பினர்கள் இஷ்டம்போல் பேசலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே அதை மணி அடித்து தடுக்க இருந்தேன். துரை கோவிந்தராசன் அவர்கள் தயவு செய்து கொடுத்திருக்கும் அறிக்கையை படிக்கவும். அவர் இதுவரையில் படித்ததை எல்லாம் குறிப்பேட்டில் இருந்து நீக்கி விட வேண்டும் என்று உததரவு இடுகிறேன். அவர் இனிமேல் புதிதாக படிக்க ஆரம்பிக்கட்டும்.

## 8. கவன ஈர்ப்புகள்.

### (அ) சித்தமல்லிப் பகுதியில் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, '' தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலூகா சித்தமல்லிப் பகுதியில் சுமார் 16 ஏக்கர் நிலத்தில் விளைந்த 300 மூட்டை நெல் கொள்ளையடிக்கப்பட்டும் வைக்கோல் போர்கள் தீ வைக்கப்பட்டும் தென்னை, வாழை உயிர்வேலி மற்றும் மூங்கில்கள் வெட்டி அழிக்கப்பட்டும் உள்ளதால் அப்பகுதி விவசாயிகளிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.